DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | திருப்பதி |
| Father's Name | வேலு |
| Village | முல்லை |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | விவசாயம் |
| Age | 44 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **31.10.2025**

**O.S. No. 24/2017** **வா.சா.3**

**குறுக்கு விசாரணை :-**

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பானை எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். எனது ஊர் முல்லை கிராமம் என்றாலும் வழக்கு சொத்தானது ஆலங்காயத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்திற்கும் என் வீட்டிற்கும் சுமார் 10 கிலோமீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கும் சுமார் 11 கிலோ மீட்டர் இருக்கும். வழக்கின் வாதிகளும் பிரதிவாதியும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கணவர் விழுப்புரத்தில் சர்வேயராக பணிபுரிந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆகவே நான் கூறுவது போன்று விக்கிரமனின் தாயாருக்கு துணையாக இருந்தார் என்பது தவறு என்று சொன்னால் சரியல்ல.

2. வழக்கு சொத்துக்களில் வீட்டு கதவு எண் அல்லது வீட்டு வரி எவ்வளவு செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சாந்தி என்பவர் பெயரில் மின்னிணைப்பு

பயன்படுத்தி வந்ததாக கூறி இருக்கிறேன் மேற்படி மின்னிணைப்பு எண் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

3. இரண்டாம் வாதியின் மாமியார் உடல்நிலை பாதிக்கப்பட்டதை பிரதிவாதி சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அவருக்கு ஆதரவாக ஒரு தவறான ஆவணம் ஏற்படுத்தி கொண்டார் என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது ஆதியில் முனிகான் குமாரர் நல்லய்யபோயன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி நல்லய்யபோயன் தனது மனைவியான சின்னுஅம்மாள் என்பவர் பெயரில் 11.04.1966–ம் தேதி ஒரு தானப்பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி தான பத்திரம் ஏற்பட்ட காலத்திலிருந்து வழக்கு சொத்தானது சின்னுஅம்மாள் என்பவரின் சுவாதீனத்தில் தான் இருந்து வந்தது என்றால் சரிதான்.

4. சின்னுஅம்மாள் என்பவரிடமிருந்து கடந்த 19.01.1975–ம் தேதியில் சாந்தி கிரயம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 27.09.20006–ம் தேதி இந்த வழக்கு சொத்தை சாந்தியிடமிருந்து வசந்தா கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது வழக்கு சொத்து வசந்தாவின் சுவாதீன அனுபவத்தில் நான் இருந்து வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான பட்டாவும் வசந்தா பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது வசந்தா புதிதாக ஒரு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதற்கு உண்டான வரியும் பிரதிவாதி வசந்தாதான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். மின் இணைப்பும் வசந்தாவின் பெயரில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல மின் இணைப்பானது தற்போதும் காந்தம்மாள் பெயரில் தான் உள்ளது மின் இணைப்புக்கான தொகை மற்றும் வசந்தா செலுத்தி வருகிறார்.

5. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்கு சொத்தானது சாந்தி இறந்த பிறகு இறந்து போன ஒன்றாம் வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது என்று நான் கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். வழக்கு சொத்தானது

தற்போது பிரதிவாதியின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றாலும் நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியிருப்பது போன்று அத்துமீறில் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

6. வழக்கு சொத்தானது சாந்தி அம்மாள் என்பவரிடமிருந்து பிரதிவாதி ஏற்கனவே விற்பனைக்கு வாங்கி விட்டதால் பிரதிவாதிக்கு பாதிக்கப்பட்டது என்றாலும் வாதிகளுக்கு அது பாத்தியப்பட்டது அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது**

**மறுவிசாரணை இல்லை.**

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.11.28 10:46:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.